பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 30 சனிக்கிழமை 14.05.2022 கதிர் 83

## தப்பிப்பிழைப்பாரா பஸில் ராஜபக்ஷ?

மல்வானைப் பகுதியில் 16 ஏக்கர் நிலப்பரப்பைக் கொள்வனவு செய்து அங்கு சொகுசு இல்லத்தை நிர்மாணித்தமையின் ஊடாக அரசநிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பான உத்தரவு அடுத்த மாதம் 3ஆம் ☞2

# ரணில் அரசை ஆதரியோம்; வீழ்த்தவும் உதவமாட்டோம்!



## மனோ அணி திட்டவட்டம்

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பங்கேற்காது. ஆனால், அந்த அரசை உடனடியாகக் காலில் இழுத்து வீழ்த்தும் எந்தவொரு முயற்சிக்கும் ஆதரவளிக்கவும் மாட்டோம்.**

**- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமது கூட்டணியின் முடிவை அறிவித்தார்.** ☞2

## பொலிஸ்மா அதிபர் பதவி விலகவேண்டும்

### அவரைக் கைதுசெய்யவும் வேண்டும் என்கிறார் சுமந்திரன்



பொலிஸ்மா அதிபர் பதவி விலக வேண்டும் என்று ஏற்கனவே வலியுறுத்தியிருந்தேன். அவர் பதவி விலகுவது மாத்திரமின்றி, கொள்ளைக்காரர்களைக் கைதுசெய்யாமைக்காக அவர் கைது ☞2

## 4 அமைச்சர்கள் பதவிப்பிரமாணம்



புதிய அமைச்சரவை அமைச்சர்களாக நான்கு பேர் இன்று கொழும்பு - கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். புதிய அமைச்சர்கள் விபரம் வருமாறு:-

தினேஷ் குணவர்தன - அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர்.

பேராசியரியர் ஜீ.எல்.பீரிஸ் - வெளிவிவகார அமைச்சர்.

பிரசன்ன ரணதுங்க - நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர்.

கஞ்சன விஜேசேகர - மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர்.

## எம்.பி. ஒருவரின் பாதுகாப்புக்கு 6 பொலிஸார்

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஒரு நாடாளுமன்றஉறுப்பினருக்கு 6 பொலிஸ் உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உள்ளிட்ட ஆறு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பிரதேச பொலிஸ் நிலையங்களில் தற்போது கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் ☞2

## ராஜபக்ஷக்கள் இல்லாத அமைச்சரவை உதயம்!



புதிய அமைச்சரவையிலும் ராஜபக்ஷக்களுக்கு இடம்வழங்கப்படமாட்டாது எனத்தெரியவருகின்றது.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ☞2

## ராஜபக்ஷக்களுடன் சேர்த்து ரணிலையும் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பவேண்டும்

### ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார வலியுறுத்து



ராஜபக்சக்களுடன் சேர்த்து புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பவேண்டும்.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம்அவர்மேலும்கூறியதாவது:-

மக்களால் ☞2

## நியூசிலாந்தும் இலங்கைக்கு நிதியுதவி



பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் இலங்கை விவசாயிகளுக்கு உதவுவதற்கும், பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களுக்கு உணவு வழங்குவதற்கும் என 5 இலட்சம் நியூஸிலாந்து டொலர்களை வழங்குவதாக நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின்உணவுமற்றும்விவசாய அமைப்பு ஆகியவற்றின்ஊடாகஇலங்கைக்கு இந்த நிதியுதவி ☞2

## ஆதரவு வழங்குமாறு கோரி சஜித்துக்கு ரணில் கடிதம்!



புதிய அரசில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்களிப்பை கோரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையை ஸ்திரப்படுத்தும் ☞2

## தப்பிச் சென்ற 26 கைதிகளை சரணடையுமாறு அறிவுறுத்தல்

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மையைத் தொடர்ந்து வட்டரெக்க சிறைச்சாலையிலிருந்து 26 கைதிகள் காணாமல்போயுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

தப்பியோடிய கைதிகள் சிறைச்சாலையிலோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ சரணடைவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது எனத் திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதன் பிரகாரம், கைதிகள் 0114 677 177 அல்லது 0114 677 517 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொண்டு சரணடைவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் ஏற்பட்ட அமைதியின்மையின்போது, வட்டரெக்க சிறைச்சாலையில் இருந்த ☞2

## ரணிலுக்குத் தோள்கொடுக்க எம்.பிக்களாக பதவியேற்கவுள்ள ஐ.தே.க. உறுப்பினர்கள்?

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் நாடாளுமன்றஉறுப்பினர்களாகப்பதவியேற்கவுள்ளனர் என்று கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமராகப் பதவியேற்றுள்ள தமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவியாக இவர்கள் நாடாளுமன்றம் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை நாடாளுமன்றம் அனுப்புவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் 6 பேர் பதவி விலகச் செய்வதற்காக தற்போது அவர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி அவர்கள் பதவி விலக இணங்கும் பட்சத்தில் தேசியப்பட்டியல் உறுப்பினர்களாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் எம்.பிக்களாகப் பதவியேற்பார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, மருந்து, உரம், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை ☞2

# முள்ளிவாய்க்கால் நினைவு மூன்றாம் நாள் நவாலியில்!



(கலையமுதன்)
யாழ்ப்பாணம்,மே.13

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாள் நினைவேந்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் நவாலியில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்திற்கு அருகில் உள்ள நினைவுத்தூபியில் இன்று காலை 9.30 மணியளவில் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நவாலி புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் இலங்கை விமானப் படையினரின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கும் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் இதில்கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் - நவாலி புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் 1995 ஆடி மாதம் 9ம் திகதி அரச விமான தாக்குதலில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சேற்றில் சிக்கி மன்னார் மீனவர் பரிதாபச் சாவு

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,மே.14

மன்னாரில் கடலில் தொழிலிற்காக சென்ற மீனவர் ஒருவர் சேற்றில் அகப்பட்டநிலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

யாக்கிலின் றாகில் என்னும் 29 வயதுடைய - மன்னார், சவுத்பாரைச் சேர்ந்த - குடும்பஸ்தரே

இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

மன்னாரில் இருந்து நேற்று கடலிற்குச் சென்ற மீனவர் ஒருவர் கடலில் சேற்றில் அகப்பட்டுக் காணாமல் போய்யுள்ளார். அவரை நேற்றைய தினம் தேடிய போதும் மீட்க முடியவில்லை.

இன்றைய தினம்அவரின் சடலம் உடல்மீடகப்பட்டு மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ராஜபக்ஷக்களுடன் சேர்த்து ரணிலையும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரிக்கப்பட்டவரே ரணில் விக்கிரமசிங்க. மக்களால் தற்போது விரட்டப்படுபவரே கோட்டாபய ராஜபக்ஷ. இவ்விருவரும் இணைந்து நடந்தும் ஆட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியதா? இது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரான நியமனமாகும். ரணில் கோட்டாவை நம்புகின்றார். கோட்டா ரணிலை நம்புகின்றார். ஆனால், இவ்விருவரையும் மக்கள் நம்பவில்லை. எனவே, ராஜபக்ஷக்களுடன் சேர்த்து ரணிலையும் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பவேண்டும்.

2018 இல் ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சி இடம்பெற்றது. மஹிந்த ராஜபக்ஷவைப் பின்கதவால் அழைத்து வந்து பிரதமராக்கினார் மைத்திரிபால சிறிசேன. இன்றும் அதற்கு ஒப்பானதொரு செயல்தான் நடந்துள்ளது. தமது முகாமுக்கு எதிராகச் செயற்பட்டவரை அழைத்து கோட்டா பிரதமராக்கியுள்ளார். இதுமக்கள்ஆணையை மீறும் செயலாகும்.

வெள்ளை வான் கலாசாரத்தை ஆரம்பித்தவர்களுடன் இணைந்து ரணிலால், எப்படி ஜனநாயகத்துக்காகக் குரல் கொடுக்க முடியும்?

எனவே, குறுகிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அனைத்துக்கட்சிகளினதும்நிலைப்பாடு இதுதான் - என்றார்.

## எம்.பி. ஒருவரின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு விருப்பமானவர்களை அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவில் இணைத்துக்கொண்டு தமது பாதுகாப்புச் சேவைகளுக்கு அவர்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் நாட்டில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும், அவர்களின் வீடுகளின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் மரணமடைந்துள்ளார்.

அதனைக் கவனத்தில்கொண்டே நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்குப் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## ஆதரவு வழங்குமாறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியில் தம்முடன் இணைந்து பணியாற்றுமாறும் அவர் அந்தக் கடிதத்தின் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய அரசில் எவ்வித அமைச்சுப் பதவியும் ஏற்கப்படமாட்டாது என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள நிலையிலேயே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## நியூசிலாந்தும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும் என்று நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் நனையா மஹூட்டா டுவிட்டர் செய்தி ஊடாகத் தெரிவித்துள்ளார்.

இது இலங்கைக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான 30 வருட கால ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும், இந்த 30 வருட காலத்துக்குள் நியூசிலாந்து இலங்கைக்கு 25.07 மில்லியன் நியூஸிலாந்து டொலர்களை அபிவிருத்தித் திட்டங்களுக்காக உதவியாக வழங்கியது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ரணிலுக்குத் தோள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கிய நான்கு குழுக்களை பிரதமர்ரணில்விக்கிரமசிங்கநியமித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தப்பிச் சென்ற 26 கைதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

181 கைதிகள் வேலைத்திட்டமொன்றுக்காக விடுவிக்கப்பட்ட நிலையில், அவர்களை மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும்போது, அவர்கள் பயணித்த பஸ் நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டது எனவும், இதன்போது 58 கைதிகள் தப்பிச் சென்றனர் எனவும், அவர்களில் 32 பேர் இதுவரை சரணடைந்துள்ளனர் எனவும் றைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

## ராஜபக்ஷக்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவும் அமைச்சுப் பதவிகள் எதனையும் வகிக்கமாட்டார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் சாதாரண எம்.பிக்களாகவே செயற்படவுள்ளனர்.

## பொலிஸ்மா அதிபர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவும் வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றிலேயே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

## ரணில் அரசை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு குறைந்தபட்சதீர்வுகளை காண புதிய அரசுக்கு அவகாசம் தேவை என்பதை நாம் ஏற்கின்றோம். தமது அரசில் பங்கேற்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமக்கு அழைப்பு விடுத்தார். அவரது அழைப்புக்கு நன்றி கூறி, கொள்கை அடிப்படையில் அதை நாம் நாகரிகமாக மறுத்து விட்டோம். ஆனால், அதற்காக நாம் கட்சி அரசியல் செய்து கூச்சல், குழப்பம் விளைவிக்க விரும்பவில்லை. வாழ்வாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்க அவரால் இயன்றதை பிரதமர் செய்யட்டும் என்றும் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் அவர் கூறியதாவது:-

ரணில் விக்கிரமசிங்க, எமது முன்னாள் பிரதமர். அவரது பலமும், பலவீனமும் எமக்கு நன்கு தெரியும். பலவீனம் பற்றி இப்போது பேசி ஜனரஞ்சக அரசியல் செய்ய தமிழ் முற்போக்குக் கூட்டணியில் எவரும் விரும்பவில்லை. சர்வதேச தொடர்பாடல் தொடர்பான, ரணிலின் பலம் மூலம் நாட்டுக்கு நன்மை நடக்குமாயின் அதை நான் முழு மனதுடன் வரவேற்கிறோம்.

இன்று நாட்டில் உணவு இல்லை. மருந்து இல்லை. எரிவாயு இல்லை. எரிநெய் இல்லை. உரம் இல்லை. மின்சாரம் இல்லை. இவற்றுக்கு குறைந்தபட்ச தீர்வுகளையாவது அவர் தரவேண்டும். பிரதமர் அதை செய்யட்டும். அதற்கு பொறுப்புள்ள கட்சியாக நாம் இடம் கொடுப்போம். ஆகவே இன்றைய சூழலில், நாடாளுமன்றத்தில் அவரது அரசின் காலை இழுத்து விடும் எந்தவொரு முயற்சியையும் நாம் ஆதரிக்க மாட்டோம்.

நாட்டில் பொருளாதார பிரச்சினைகள் உள்ளன. நமது நாடு வாங்கியுள்ள கடன்களை உரிய காலத்தில் திருப்பி செலுத்த முடியாதுள்ளது. ஆகவே, கடன் தந்தோரிடம் பேசி கடன் திருப்பிச் செலுத்துவதை மறு அட்டவணைப்படுத்த வேண்டும்.

அத்தியாவசிய தேவைகளைப் பெற அமெரிக்க டொலர் இல்லாமல் உள்ளது. இதற்காக நட்பு நாடுகளிடம் கடன்வழி உதவிகளை, நாணய மாற்று உதவிகளைப் பெற வேண்டும். இந்தியா இவற்றை ஏற்கனவே வழங்கி வருகின்றது.

இவை இன்னமும் அதிகரிக்க வேண்டும். ஏற்கனவே உதவி தரும் நட்பு நாடுக் குழுமம் ஒன்றை ஏற்படுத்த பிரதமர் முயற்சி செய்கின்றார். இது நல்லது. வரிகொள்கை சீரமைக்கப்பட வேண்டும்.

அரசமைப்பு ரீதியாக, குறைந்தபட்சம், 20ஐ வாபஸ் வாங்கி, மீண்டும் 19ஐக் கொண்டுவர வேண்டும். நாட்டின் குரலுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக ஒரு கால அட்டவணை தயாராக வேண்டும். இனிமேல் ராஜபக்ஷர்களுக்கு இந்நாட்டு அரசியலில் இடம் தர மக்கள் தயாரில்லை. இதைப் பிரதமர் ரணில் புரிந்துகொண்டுள்ளார் என நம்புகின்றோம் - என்றார்.

## தப்பிப்பிழைப்பாரா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கம்பஹா மேல்நீதிமன்ற நீதிபதி நிமல் ரணவீர முன்னிலையில் அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையைத் தொடர்ந்து முன்கொண்டு செல்வதா, இல்லையா என்பது தொடர்பான உத்தரவு நேற்று பிறப்பிக்கப்படவிருந்தது.

எனினும், வழக்கின் பிரதிவாதிகள் நேற்று மன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை. முதலாவது பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டின் தற்போதைய நிலை காரணமாகவும், திருக்குமார் நடேசன் சுகவீனம் காரணமாகவும் மன்றில் முன்னிலையாகவில்லை என அவர்களது சட்டத்தரணி மன்றுரைத்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழரின் பொறுப்புணர்வு

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் அதிருப்தி வெளியிட்ட தமிழ்க் கட்சிகள், எனினும் நாட்டின் பொருளாதார முயற்சி என்ற அவசர – அவசிய – செயற்பாடு தொடர்பில் அவர் எடுக்கும் முயற்சிகளுக்கு இடையூறு பண்ணாமல் ஆதரித்து நடப்போம் என்று உறுதி கூறியமை மூலம் தங்களின் தேசியப் பொறுப்புணர்வை சரிவரப் பிரதிபலித்திருக்கின்றன.

ரணிலின் அரசில் பதவி ஏதும் ஏற்க மாட்டோம், அதேசமயம் அந்த அரசை உடனடியாக வீழ்த்துவதற்கு எவருக்கும் உதவவும் மாட்டோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கூறியிருக்கின்றார்.

இதே போன்ற கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் பிரதிபலித்திருக்கிறார்.

“ரணில் மிகுந்த அனுபவம் மிக்க அரசியல் தலைவர் என்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். தற்போதைய சூழலில் அவரது அனுபவத்துக்கு வேறு யாரும் இங்கு நிகர் இல்லை.

“அதேசமயம் எங்களுக்கு உடனடியாக ஓர் அரசும் தேவை. அதன் காரணமாக ஒரு பிரதமரை ஜனாதிபதி நியமித்தமையை நாம் வரவேற்கின்றோம்.

“ஆனால் நாடு தனித்துப் பொருளாதார நெருக்கடியை மட்டும் எதிர்கொள்ளவில்லை. நாடு மிக ஆழமான அரசியல் நெருக்கடியையும் எதிர்கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

“எனினும் பொருளாதார நெருக்கடியும் விரைந்து கையாளப்பட வேண்டியுள்ளது. அதனை ரணில் விக்கிரமசிங்க நேர்த்தியாகக் கையாள்வாரானால் அதற்கு எங்கள் அனைவரினதும் ஆதரவு முழு அளவில் உண்டு – அவர் சட்டபூர்வமான தகுதியுடைய பிரதமர் அல்லர் என்ற எமது நிலைப்பாட்டை கைவிடாமல் அந்த ஆதரவை வழங்குவோம்’’ – என்று சுமந்திரனும் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்துக்கள் ரணிலின் அரசை உடனடியாக வீழ்த்துவதற்கு நாடாளுமன்றத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டால் அதற்கு தமிழ் கட்சிகளின் கணிசமான பிரதிநிதிகள் ஆதரவு தரமாட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

தமது அரசு தப்பிப் பிழைக்குமா என்ற நித்திய கண்ட நெருக்கடி நிலைமை குறித்துச் சிந்திக்காமல் தாம் எதிர்பார்க்கும் பொருளாதார நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க முழு ஈடுபாட்டில் கவனிப்பதற்கான சூழலை தமிழ்க் கட்சிகளின் இன்றைய நிலைப்பாடு அவருக்கு தந்து நிற்கின்றது.

தமிழ்த் தலைவர்கள் தமது இனத்தின் நலன்கள், பிரச்சினைகள், பாதிப்புகள் குறித்து எப்போதும் விசேட கவனம் செலுத்தினாலும் – அவர்களின் தலையாய பிரச்சினைகளாக அவை இருந்தாலும் – இலங்கை நாட்டுக்குள் மக்களின் தேசிய பிரச்சினைகளை எதிர்கொள்வதில் பொறுப்புணர்வுடனும் நேர்த்தியாகவும் செயற்படுகின்றனர் என்பதற்கு அவர்களின் இந்த நடத்தை – இந்த அரசியல் நிலைப்பாடு – நல்ல உதாரணம்.

பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கும் புதிய பிரதமர் ரணிலின் முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படுத்த மாட்டோம் என்று வாக்குறுதி தரும் சுமந்திரன், இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்டுகின்றார். அதுவும் கவனிக்கத்தக்கது.

“வெறுமனே 113 எம்.பிக்களின் ஆதரவை நாடாளுமன்றத்தில் பிரதமர் காட்டுவதன் மூலம் மட்டும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுவிடாது. அரசியல் குழப்பம் தீர்ந்து விடாது. வீதிக்கு இறங்கிய மக்கள் தொடர்ந்தும் ‘கோட்டா கோ ஹோம்’, ‘ரணில் கோ ஹோம்’ என்று முழங்கிக் கொண்டிருப்பார்களாயின் அரசியல் குழப்பம் நீடிக்கவே செய்யும். பொருளாதார ஸ்திரத்தன்மை வராவிட்டால் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் வாய்ப்பில்லை.” என்கிறார் அவர்.

ரணிலின் அரசும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இவற்றை மறந்து விடாமல் இருப்பது நல்லது.

# எம்.பிக்களை விலைக்குவாங்கும் முயற்சியில் பிரதமர் ரணில்!

## அநுர குற்றச்சாட்டு



நல்லாட்சி அரசாங்கத்தில் மைத்திரிபால சிறிசேன செய்த சூழ்ச்சியையே தற்போது கோட்டாபய ராஜபக்ஷவும் செய்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி அவர் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளார் எனதகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்–

நாட்டு மக்களின் குரல், போராட்டங்கள் என எவற்றையும் கவனத்தில் கொள்ளாமல் ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

எனவே இது செல்லுபடியற்ற நியமனமாகும். நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கான வாக்குகளைக் கூட தேர்தலில் பெற்றுக் கொள்ள முடியாத – மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, எவ்வாறு பிரதமராகப் பதவியேற்க முடியும்?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவரை ஒருவர் நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மக்கள் அவர்கள் இருவரையுமே நம்பவில்லை.

2018 நல்லாட்சி அரசாங்கத்தின் போது மைத்திரிபால சிறிசேன செய்த சூழ்ச்சியையே கோட்டாபய ராஜபக்ஷவும் தற்போது செய்துள்ளார். இவை ஜனநாயக விரோத செயற்பாடுகளாகும்.

ரணில் விக்கிரமசிங்க தேசிய சொத்துக்களைவிற்பனைசெய்வதைதடுப்பதற்காகவே மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆணையை வழங்கினர். ஆனால் அவர் மக்கள் ஆணைக்குழுவுக்கு முரணாகவே இன்று செயற்படுகிறார். இது தோற்கடிக்கப்பட வேண்டிய அரசியல் கலாசாரமாகும். ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ராஜபக்ஷாக்களின் பாதுகாவலராகவே செயற்படுவார்.

மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்ததன் விளைவாகவே இன்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடற்படை முகாமில் மறைந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே ராஜபக்ஷாக்களையும் ரணில் விக்கிரமசிங்கவையும் ஒருமித்து தோல்வியடையச் செய்ய வேண்டும். அதற்கு புதியதொரு நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

தற்போது ரணில் மேற்புறமாக இருந்தாலும் உட்புறமாக பஸில் ராஜபக்ஷவே உள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நடவடிக்கைகளை ரணில் ஆரம்பித்துள்ளார். அதன் மூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை திரட்ட முற்படுகிறார் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

சுயம்வரத்தில் மணப்பெண் தனது மணவாளனை தெரிவு செய்து மாலையிடச் செல்லும் இறுதி நேரத்தில் நானும் சுயம்வரத்தில் கலந்துகொள்கின்றேன்என்றுஅறிவிப்பதைப் போலவே சஜித்தின் செயற்பாடு அமைந்துள்ளது. அதைப் பற்றி பேசுவது பிரயோசனமற்றது என்றார்.

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இம்மாதம் பொது மன்னிப்பு வழங்கப்படலாம்!

## தென்னிலங்கை ஊடகம் தகவல்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இம்மாதம் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படலாம் என அரசாங்கத் தகவல்களை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ராமநாயக்க தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.

இந்த நிலையில் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் பல தரப்பினர் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

என்ற போதும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் தற்போது இந்த செய்தி வெளியாகியுள்ளது.



# மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேரை கைதுசெய்ய சி.ஐ.டிக்கு உத்தரவிடுக!

## நீதிமன்றில் மனுத் தாக்கல்

கோட்டா கோ கம, மைனா கோ கம அமைதிப் போராட்டத்தில் அத்துமீறி தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட 7 பேரைக் உடனடியாக கைது செய்ய சி.ஐ.டியினருக்கு உத்தரவிடுமாறு கோரி சட்டத்தரணி ஒருவர் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முறைப்பாடொன்றினை செய்துள்ளார்.

சட்டத்தரணி சேனக பெரேராவே 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 136 (1) (அ) அத்தியாயத்தின் கீழ் தனிப்பட்ட மனுவாக (ப்ரிவடெ ப்லைன்ட்) இதனை இவ்வாறு தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன, மொறட்டுவை நகர சபை தலைவர் சமன்லால் பெர்னாண்டோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன ஆகியோரை கைது செய்ய உத்தரவிடுமாறு கோரியே இம்முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# உக்ரைனில் ரஷ்யா அமைத்த தற்காலிக பாலம் தகர்ப்பு

## சிவர்ஸ்கி ஆற்றை கடக்கும் ரஷ்யாவின் முயற்சி முறியடிப்பு





உக்ரைன் நாட்டில் ரஷ்யா அமைத்த தற்காலிக பாலம் ஏவுகணைகள் மூலம் தகர்த்தப்பட்டதாக அந்நாட்டு ராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யா, அந்நாட்டின் மீது ராணுவ நடவடிக்கையை எடுத்து வருகிறது. டான்பாஸ் மாகாணத்தில் ஓடும் சிவர்ஸ்கி ஆற்றை கடக்க முயன்ற ரஷ்ய படைகள் மீது உக்ரைன் ராணுவத்தினர் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இதில் ஆற்றை கடக்க ரஷ்யா அமைத்திருந்த தற்காலிக பாலம் தகர்க்கப்பட்டது.

மேலும் ரஷ்ய படையின் பெரும்பாலான வாகனங்கள் அழிக்கப்பட்டன எனவும் ஏராளமான வீரர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது. கிழக்கு உக்ரைனில் நுழைவதற்காக சிவர்ஸ்கி ஆற்றை 3 முறை ரஷ்ய ராணுவத்தினர் கடக்க முயன்றனர் எனவும் அது தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அந்நாடு தெரிவித்தது. இதனிடையே போர் குற்றத்தில் ஈடுபட்டார் என ரஷ்ய வீரர் மீது குற்றம் சாட்டப்பட்டு உக்ரைன் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப் பட்டது.

மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் சுகாதார மையங்களை குறிவைத்து ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன எனவும், 570 சுகாதார மையங்கள், 101 மருத்துவமனைகள் அழிக்கப்பட்டுள்ளன எனவும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்க்கி குற்றம்சாட்டியுள்ளார். பிரேஸிலில் தஞ்சம் அடைந்துள்ள உக்ரைன் மக்களுக்கு உணவு வழங்கப்படுவதாக அகதிகள் முகாம் அதிகாரிகள் தெரிவித்தனர். இதனிடையே போர் காரணமாக போலந்தில் செயல்பட்டு வந்த உக்ரைனுக்கான இந்திய தூதரகம் வரும் 15ம் திகதி முதல் தலைநகர் கீவில் இயங்கும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

# டுவிட்டரை வாங்கும் முடிவு எலான் மஸ்க் திடீர் நிறுத்தம்



டுவிட்டர் நிறுவனத்தை வாங்கும் ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறேன் என எலான் மஸ்க் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். டெஸ்லா நிறுவனரும் உலகின் பெரும் பணக்காரருமான எலான் மஸ்க், டுவிட்டர் பயனாளர்களின் கருத்து சுதந்திரம் குறித்து தொடர்ந்து கேள்வி எழுப்பி வந்தார். டுவிட்டரை வாங்க வேண்டும் என்ற தனது கோபத்தையும் வெளிப்படுத்தினார். இதைத் தொடர்ந்து, அவர் டுவிட்டர் நிறுவனத்தை ரூ.3.34 லட்சம் கோடிக்கு வாங்குவது கடந்த மாதம் உறுதியானது. இதற்கான பணத்தையும் அவர் திரட்டி வந்தார்.

இதற்கிடையே, போலி டுவிட்டர் கணக்குகளை முடக்க உள்ளதாக அவர் தெரிவித்தார். இதனால் போலி கணக்குகள் கட்டுப்படுத்தப்படும் என பரவலாக கருதப்பட்டது. ஆனால், மொத்த பயனாளர்களில் 5%க்கும் குறைவாகவே போலி கணக்குகள் உள்ளன என டுவிட்டர் நிறுவனம் தெரிவித்தது. இந்நிலையில், இந்த விவகாரத்தில் திடீர் திருப்பமாக டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறேன் என மஸ்க் நேற்று அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், போலி கணக்குகள் குறித்து தகவல்கள் திரட்ட அவகாசம் தேவைப்படுவதால் டுவிட்டர் நிறுவனத்தை வாங்கும் முடிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறேன் என கூறியுள்ளார். அவரது கருத்து குறித்து டுவிட்டர் நிறு வனம் எந்த பதிலும் அளிக்கவில்லை. எலான் மஸ்கின் இந்த அறிவிப்பை தொடர்ந்து, டுவிட்டர் நிறுவனத்தின் பங்குகள் மதிப்பு 18 சதவீதம் சரிந்தன. டெஸ்லாவின் பங்குகள் விலை 5 சதவீதம் உயர்ந்தன.

# அறிவியல் வரலாற்றில் மைல் கல் நிலவு மண்ணில் செடி முளைத்தது

## நாசா விஞ்ஞானிகள் சாதனை



அறிவியல் வரலாற்றில் முதல் முறையாக, நிலவில் இருந்து கொண்டு வந்த மண்ணில் செடிகளை வளர்த்து நாசா விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். நிலவில் மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா? என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். இந்நிலையில், நிலவை ஆராய்ச்சி செய்வதற்காக நாசா அனுப்பிய அப்பல்லோ விண்கலம் தனது 11, 12 மற்றும் 17வது விண்வெளி பயணத்தின் போது, நிலவில் இருந்து பூமிக்கு அனுப்பிய மண் மாதிரிகளை கொண்டு செடிகளை வளர்க்க அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்தனர். இந்த முயற்சியில் நாசா விண்வெளி மையமும் இணைந்தது. அப்பல்லோ விண்கலத்தின் 3 பயணங்களின் போதும் நிலவில் இருந்து மொத்தம் 12 கிராம் மண் மட்டுமே எடுத்து வரப்பட்டிருந்தது.

ஒவ்வொரு செடிக்கும் ஒரு கிராம் அளவுள்ள மண் மட்டுமே ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டது.

அதனுடன் நீர் மற்றும் செடிகளின் விதைகளை சேர்த்து, தூய்மையான அறையில் சீலிடப்பட்ட கண்ணாடி பெட்டிகளில் சூரிய ஒளி, காற்று கிடைக்கும் வகையில் வைத்தனர்.

நிலவு மண் ஊட்டச்சத்து குறைவானது ன்பதால், தினசரி ஊட்டச்சத்து கரைசல் ஊற்றப்பட்டது. கூடுதலாக, அவற்றுடன் அரபிடோப்சிஸ் செடியின் விதைகளும் சேர்க்கப்பட்டன.

சில நாள்களில் விதைகள் அனைத்தும் முளைத்து இருந்தன. இதன் மூலம், நிலவு மண்ணில் செடி முளைக்கும் என்பது உறுதியாகி இருக்கிறது. இருப்பினும், இவை பூமியில் விளையும் செடிகளை போன்று வலுவாக இல்லை. மிக மெதுவாகவும் வளர்ந்தன. வேர்களின் வளர்ச்சி தடைப்பட்டது.

சில செடிகளில் இலைகள் கூட வளர்ச்சி அடையவில்லை. சிவப்பு நிறத்தில் புள்ளிகள் காணப்பட்டன. - இருப்பினும், இந்த ஆராய்ச்சி நாசாவின் விண்வெளி ஆய்வின் முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளது.



# உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் உடல்களை ஒப்படைக்கத் தயார் என்கிறது உக்ரைன்

செர்னிஹிவ் பிராந்தியங்களில் போரின்போது உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் உடல்களை ஒப்படைக்க தயார் என உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது. உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் உடல்களை உக்ரைன் ராணுவம் குளிரூட்டப்பட்ட ரயில் வண்டிகளில் ஏற்றியுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
Kalaikkathir



# இலங்கைக்கு தமிழகத்தில் இருந்து உதவிப் பொருள்கள் நாளை மறுதினம் ஒரு தொகுதி அனுப்பப்படவுள்ளதாம்




இலங்கையில் கடுமையான பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டு, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், இலங்கை மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் கொடுத்து உதவுவதற்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முனைந்துள்ளார். இலங்கை மக்களுக்கு 80 கோடி ரூபா மதிப்புள்ள 40 தொன் அரிசி, 28 கோடி மதிப் புள்ள 137 வகை மருந்துகள், 15 கோடி மதிப்புள்ள 500 தொன் பால் மா ஆகியவை வழங்கப்படும் என்று தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. இதற்காக தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசும் இதற்கு அனுமதி வழங்கியது.

இதையடுத்து இலங்கை மக்களுக்குநிவாரணப்பொருள்களை வழங்க நான்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கொண்ட குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ், நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் எஸ்.பிரபாகர், ஆவின் நிர்வாக இயக்குநர் சுப்பையன், மருத்துவப் பணிகள் கழக நிர்வாக இயக்குநர் தீபக் ஜோசப் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்

இந்த குழு இலங்கைக்கு தமிழக அரசு சார்பில் நிவாரணப்பொருள்களை அனுப்பும் பணியை மேற்கொண்டு வருகிறது. தற்போது நிவாரணப் பொருள்களை பொதி செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பொதிகளில் தமிழ்நாட்டு மக்களிடமிருந்து அன்புடன் என்று அச்சிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக வருகிற 16 ஆம் திகதி திங்கட்கிழமை தமிழகத்தில் இருந்து ஒரு தொகுதி நிவாரணப் பொருள்கள் இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளன. சென்னைத் துறைமுகத்தில் இருந்து கப்பலில் அரிசி, மருந்து பொருள்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

முதல் கட்டமாக பத்தாயிரம் தொன் அரிசி மற்றும் பால் மா, மருந்து வகைகள் கொண்டு செல்லப்படவுள்ளன. அதன் பிறகு மீண்டும் 22 ஆம் திகதி, இரண்டாம் கட்டமாக இலங்கைக்கு நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கோதுமை ஏற்றுமதிக்கு தடை மத்திய அரசு திடீர் உத்தரவு



ரஷ்யா – உக்ரைன் போர் உள்ளிட்ட உலக விவகாரங்களால் கடந்த சில நாள்களாக உலக அளவில் கோதுமையின் விலை ஏறி வருகிறது. இதையடுத்து இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு கோதுமையை ஏற்றுமதி செய்வதைத் தடை விதித்து மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சர்வதேச அளவில் கோதுமை விலை உயர்ந்து வருகிறது. இதையடுத்து இந்தியாவின் ஒட்டுமொத்த உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலும் அண்டை நாடுகள், அதிகம் பாதிப்புக்குள்ளாகும் நாடுகளுக்கு ஆதரவளிப்பதைக் கருத்தில் கொண்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், முன்கூட்டியே ஏற்றுமதிக்கான ஒப்பந்தப்பணத்தைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு மட்டும் கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. இதன்படி, கோதுமை ஏற்றுமதி செய்பவர்கள், ஏற்கனவே வெளிநாடுகளில் இருந்து கோதுமை ஏற்றுமதிக்கான தொகையைப் பெற்றதற்கான கடிதத்தை வைத்திருந்தால் அவர்களுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்படும், என்று இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

## புதிய கல்விக் கொள்கையிலுள்ள நல்ல திட்டங்களை பின்பற்றத் தயார் என்கிறார் அமைச்சர் பொன்முடி



கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்ற 37 ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநரும் பாரதியார் பல்கலைக்கழக வேந்தருமான ஆர்.என்.ரவி தலைமை தாங்கி மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கினார்.

விழாவில், பங்கேற்றதமிழக அமைச்சர் பொன்முடி உரையாற்றும்போது, இது பெண்கள் பல்கலைக்கழகமா அல்லது இருபாலர் பல்கலைக்கழகமா என்ற சந்தேகம் உள்ளது. ஏனென்றால் தற்போது பட்டம் பெற்றவர்களில் ஆண்களை விட பெண்களே அதிகமாக உள்ளனர். பதக்கம் பெற்றவர்களில் கூட பெண்கள்தான் அதிகம்.

அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு? என்ற காலம் கடந்து இன்று அதிகளவில் பெண்களும் படிக்க வேண்டும் என அனைவரும் விரும்புகின்றனர். தமிழகத்தில் இன்று படிப்பில் பெண்கள் ஆர்வமாக உள்ளனர். இதுதான் திராவிட மொடல். இது பெரியாரின் மண்.

நாங்கள்எந்தமொழிக்கும்எதிரானவர்கள் அல்லர். குறிப்பாக இந்திக்கு நாங்கள் எதிரானவர்கள் கிடையாது. ஹிந்தி படித்தால் உடனே வேலை கிடைத்து விடுமா? ஹிந்தி மொழியை கட்டாயமாக்கக் கூடாது.

தமிழ் மாணவர்கள் விரும்பிய மொழிகளை படிக்கட்டும். முதலில் தமிழ். இரண்டாவதாக ஆங்கிலம் இவை இரண்டும் இங்கு முதன்மையானவை. இதுவே தமிழகத்தின் கல்விக்கொள்கை, என்று தெரிவித்தார்.

மூன்றாவதாக எந்த மொழியை வேண்டுமானா லும் மாணவர்கள் கற்றுக்கொள்ளட்டும். ஆனால், இதனைத்தான் கற்க வேண்டும் என யாரையும் கட்டாயப்படுத்தக் கூடாது. புதிய கல்விக் கொள்கையில் உள்ள நல்ல திட்டங்களை பின்பற்ற நாங்கள் தயாராகவே உள்ளோம்.

மாணவர்கள் கல்வியுடன் சேர்ந்து தொழில் கல்வியையும் கற்க வேண்டும் என்பதே முதல்வரின் எண்ணம். ஆளுநர், தமிழக மாணவர்களின் நிலை மற்றும் தமிழகத்தின் நிலையைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும், என்றும் அமைச்சர் பொன்முடி தனது உரையின் போது குறிப்பிட்டார்.

# முதுநிலை நீட் தேர்வை ஒத்திவைக்க சுப்ரீம் கோர்ட் மறுப்பு திட்டமிட்டபடி வருகிற 21 ஆம் திகதி பரீட்சை நடக்குமாம்!

2022 ஆம் ஆண்டில் முதுநிலை மருத்துவப் படிப்புகளான எம்.டி. எம்.எஸ். கற்கைகளில் சேருவதற்காக முதுநிலை நீட் தேர்வு மே 21 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்வை ஒத்திவைக்கும் படி பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த இளநிலை மருத்துவ மாணவர்கள் தரப்பில் இருந்து தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

கலந்தாய்வு நடந்து கொண்டிருப்பதால் முதுநிலை நீட் தேர்வை ஒத்திவைக்கும்படி இளநிலை மருத்துவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றினையும் தாக்கல் செய்திருந்தனர்.

அதில், 2021 ஆம் ஆண்டு மருத்துவ மேற்படிப்புக்கான அனைத்து கலந்தாய்வும், 2022 ஆம் ஆண்டு முதுநிலை நீட் தேர்வும் ஒரே நேரத்தில் நடப்பதால் குழப்பம் ஏற்படும். நடுத்தர மதிப்பெண் பெற்ற மாணவர்களை இது பாதிக்கும். எனவே மே 21 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட முதுநிலை நீட் தேர்வை ஒத்திவைத்து உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

முதுநிலை நீட் தேர்வை ஒத்திவைக்கும்படி தொடரப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, நீட் முதுநிலை தேர்வை தள்ளிவைத்தால் மருத்துவ சேவையின் பல உள்ளகத் துறைகள் பாதிக்கப்படும் என மத்திய அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

முதுநிலை நீட் தேர்வுக்கான திகதிக்கும், தற்போதைய கலந்தாய்வுகள் முடிவதற்கும் உள்ள காலப்பகுதி மிகக் குறைவு என்பதால், முதுநிலை தேர்வை ஒத்திவைக்கும் படி மனுதாரர்கள் தரப்பில் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. பெரும்பாலான இளநிலை மருத்து–வர்கள் தேர்வை ஒத்திவைக்க வேண்டும் என்று கூறுகின்றனர் எனவும், இது தொடர்பாக பிரதமரிடம் மனு அளிக்கப்பட்டிருப்பதாகவும் மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் கூறினார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதிகள், முதுநிலை நீட் தேர்வை ஒத்திவைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட முடியாது என்று கூறி, மனுவைத் தள்ளுபடி செய்தனர். வருகிற 21 ஆம் திகதி திட்டப்படி முதுநிலை நீட் தேர்வை நடத்தத் தடையில்லை எனவும் அறிவித்தனர். நீதிபதிகள் தமது தீர்ப்பை அறிவிக்கும்போது, தேர்வை ஒத்திவைத்தால் அது, குழப்பம் மற்றும் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கும். தேர்வுக்குப் பதிவு செய்த மாணவர்கள் பெரும்பாலானோரைப் பாதிக்கும். இவ்விவகாரத்தில் இரண்டு வகை மாணவர்கள் உள்ளனர். ஒரு தரப்பினர் தேர்வை ஒத்திவைக்க விரும்புகிறார்கள். இந்தத் தேர்வுக்கு விண்ணப்பித்த ஏனைய இரண்டு லட்சத்து ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், தேர்வுக்குத் தயாரான பிறகு அதனை ஒத்திவைத்தால் பாதிக்கப்படுவார்கள்.

தொற்று நோயால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து நாடு திரும்பி வரும்போது, நீதிமன்றம் வகுத்துள்ள நேர அட்டவணையை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும், தேர்வை ஒத்திவைத்தால் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படுவதுடன், மருத்துவ சேவைகளும் பாதிக்கப்படும். அந்தச் சிரமத்தை வழங்க நாங்கள் விரும்பவில்லை. எனவே தேர்வை ஒத்திவைக்கக் கோரிய மனுக்களை தள்ளுபடி செய்கிறோம், என்று தெரிவித்தனர்.

முன்னரே திட்டமிட்டபடி வருகிற 21 ஆம் திகதி முதுநிலை நீட் தேர்வு நடைபெறவிருப்பது நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

# கொக்கட்டிச்சோலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி





முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைநினைவேந்தல் வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தல்கள் மற்றும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக் கஞ்சி வழங்கும் நிகழ்வு என்பன நேற்றுக் காலை மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை படுகொலை நினைவுத்தூபிக்கு முன்பாக நடைபெற்றது. இதில் பொதுமக்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ், கொரளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் குணசேகர் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

## சீனக்குடாவில் மூதாட்டியின் சடலம் படுக்கையில் எரிந்த நிலையில் மீட்பு

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா பிரதேசத்தில் தனிமையில் வசித்து வந்து மூதாட்டி ஒருவர் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் மின்சாரம் தடைப்பட்ட நேரத்தில் கட்டில் படுக்கையில் குப்பி விளக்கு தவறிக் கவிழ்ந்ததில் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

முகம்மது அபுசாலி பசீலா (வயது-80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளர். மின்சாரம் தடைபடும் வேளைகளில் இவர் மண்ணெண்ணெய் குப்பி விளக்கு ஒன்றைப் பயன்படுத்தி வந்தார் எனக் கூறப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு முதல் அந்தப் பெண்ணின் நடமாட்டம் இல்லாததையடுத்து அயலவர்கள் அவரது வீட்டை பார்வையிட வந்தபோது அவர் தீக்காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டார். அதையடுத்து அவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உப்புவெளி விபத்தில் ரஷ்யப் பிரஜை படுகாயம்

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 3ஆம் கட்டை பிரதேசத்தில் நேற்று மதியம் ஓட்டோ - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ரஷ்யப் பிரஜை ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளானார். அவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்தில் ரஷ்யா நாட்டு பிரஜையான பி.பி.ஏ.ஏ. தமித்திரி (வயது-28) எனவும் குறித்த ரஷ்ய நாட்டு பிரஜை திருகோணமலையில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கி இருந்த இந்த ரஷ்யப் பிரஜை மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது. ஓட்டோவுடன் மோதுண்டு விபத்தில் சிக்கினார். ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினர் பதவியேற்பு

(பாறுக் ஷிஹான்)



கல்முனை மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பான புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள மருதமுனையை சேர்ந்த பதுர்தீன் ஷர்மில் ஜஹான் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனது சத்தியப்பிரமாண பத்திரத்தை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப்பிடம் கையளித்துப் பதவியேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் சபைச் செயலாளர் ஏ.எம்.ஆரிப், கட்சி ஆதரவாளர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எல். றபீக் ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமையை அடுத்து அவ்விடத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் சமூக சேவகரும் வர்த்தகருமான பதுறுதீன் சர்மில் ஜஹானை புதிய உறுப்பினராக நியமித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவினால் நியமனக்கடிதம் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

இவர் கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் கல்முனைத் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு தொகுதியில் இரண்டாவது அதிகப்படியான வாக்கு பெற்றுக் கொண்டவர் ஆவார்.

பதுறுதீன் ஷர்மில் ஜஹான், மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யின் பழைய மாணவர் சங்க உப தலைவரும் மஸ்ஜிதுல் றையான் ஜும் ஆ பள்ளியின் செயலாளரும் ஆவார்.

## முள்ளிவாய்க்கால் வலிகள் சுமந்த நினைவு அம்பாறையிலும் பகிர்வு





'கஞ்சி பரிமாறுவோம், முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்' என்ற தலைப்பில் முள்ளிவாய்க்கால் அவல நிலை குறித்து, அதனை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வினை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் திருக்கோவில் மண்டானை பிள்ளையார் ஆலயத்தில் ஒன்று கூடியவர்கள் உப்பில்லாத கஞ்சியினை அவ்விடத்தில் காய்ச்சினர். அதனை சிரட்டையில் கொண்டு வீதியினால் சென்றோர்கள் மற்றும் பஸ் தரிப்பிடங்களில் இருந்தோர்கள் என பலருக்கும் வழங்கினார்கள். அத்துடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி என்ற துண்டுப் பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# உரிமைக்காக போராடுபவர்கள் மீதான அரசின் வன்முறைகளுக்குக் கண்டனம்

சுதந்திர இலங்கையின் அரசாங்கங்களுள் மிகமோசமான அரசாங்கமான ராஜபக்ஷ குடும்பத்தினரின் அரசாங்கம் காலிமுகத்திடலிலும், அலரி மாளிகைக்கு முன்பாகவும் அமைதி வழியில் போராடிக் கொண்டிருந்தவர்களுக்கு எதிராகத் தனது குண்டர்களை ஏவி வன்முறைத் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது.

இந்த அரக்கத்தனமான, மற்றும் ஜனநாயக விரோதமான நடவடிக்கையைத் தமிழ் சிவில் சமூக அமைப்புகளாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

–காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து பல சிவில் அமைப்புக்கள் ஒன்றாக வெளியிட்ட அறிக்கையில் இவ் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையும் அதை வெளியிட்ட அமைப்புக்களின் பெயர்களும் வருமாறு;–

தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் தவறான அரசியல், பொருளாதார கொள்கைகளால் சீரழிந்துவந்த நாட்டின் பொருளாதாரக் கட்டுமானம் ஒட்டுமொத்தமாக நிலை குலைந்துள்ளது. இது மிகத் தீவிரமானபொருளாதாரநெருக்கடிகளை மக்களுக்கு இன்று ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக தெற்கில் பொதுமக்கள் பதவியில் உள்ள அரசுக்கு எதிராக குறிப்பாக ராஜபக்ஷக்களுக்கு எதிராக கடந்த இரண்டரை மாதங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் தற்போதைய ஜனாதிபதியைப் பதவி விலகும் கோரிக்கையுடன் தொடங்கப்பட்ட போராட்டங்கள் படிப்படியாக மஹிந்த பதவி விலகவும், பின்னர் அனைத்து ராஜபக்ஷ குடும்பத்தினரும் பதவி விலகவும், இன்று அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகவும் கோரும் போராட்டமாக பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. தெற்கின் இந்த மாற்றங்களைத் தமிழ் மக்களும் மிகவும் கரிசனையோடும், கவனத்துடனும் அவதானித்து வருகின்றனர். கடந்த கால தங்களது கசப்பான அனுபவங்களின் காரணமாக இன்னமும் பெரும்பாலான தமிழர் இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்ளாமல் அவதானிப்பவர்களாக இருந்து வருகின்ற அதேவேளை குறிப்பிடத்தக்க அளவு தமிழர்கள் இந்தப் போராட்டங்களில் தங்களின் பங்களிப்பைத் தனிநபர்களாகவும், குழுக்களாகவும் வழங்கி வருகிறார்கள்.

ஆரம்பம் முதல் தொடர்ந்து பதவிக்கு வந்த அனைத்து சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்களும் தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிக்கும் நோக்கில் மேற்கொண்டு வருகின்ற இன வழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து ஆரம்பத்திலிருந்து (இருபது வருடங்களுக்கு மேலாக) அமைதி வழியில் தமிழ் மக்கள் போராடியபோது அந்த அரசாங்கங்கள் அவற்றை மிகையான வன்முறை மூலம் எதிர்கொண்டன. அமைதி வழியிலான எமது கோரிக்கைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டன. தொடர்ந்தும் தமிழினவழிப்பு செயற்பாடுகளை அரசாங்கங்கள் தொடர்ந்தன. இந்நிலை தமிழ் இளைஞர்களை வேறு வழியேதுமின்றி 1970 களில் ஆயுதமேந்த உந்தித்தள்ளியது. அப்போதும் தமிழர்களின் வாழ்வுரிமைகளை வழங்க மறுத்த சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்கள் தமிழர்கள் மீது மேன் மேலும் அதிகரித்த அளவில் வன்முறைகளைத் திணித்தன. ஈற்றில் இதே ராஜபக்ஷ குடும்பத்தின் முன்னைய ஆட்சி, தமிழ் மக்கள் மேல் தொடர்ச்சியான பாரிய படுகொலைகளை நடத்தி, ஈற்றில் முள்ளிவாய்க்காலில் 2009 மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் இந்த நூற்றாண்டில் உலகின் முதலாவது பாரிய இனப்படுகொலை மூலமாக தமிழர்களின் ஆயுதவழி எதிர்ப்பையும் மௌனிக்கச் செய்தது. வன்முறைக்குப் பழக்கப்பட்டு போன சிங்கள பௌத்த பேரினவாத அரசாங் கங்கள் பொதுமக்களின் அமைதிவழிப் போராட்டங்களுக்கு எப்போதும் தனது சொந்த இனமாக இருந்தாலும் தமக்குப் பழகிய வழிகளிலேயே பதிலளிக்கும் என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

அரசு வழமை போலவே, உரிமைகளைக் கோரிய போராட்டக்காரர்களுக்கும், பொதுமக்களுக்கும் எதிராக வன்முறையைநிகழ்த்தியபோது தெற்கின் பொதுமக்கள் அரச வன்முறைக்கு பொதுமக்களின் வன்முறையே பதில் என வீதியிலிறங்கித் திருப்பி அடித்துள்ளதற்குப் பின்னாலுள்ள மன உணர்வை எங்களால் இலகுவில் புரிந்து கொள்ள முடிகின்றது.

அந்த வன்முறைகளின் அங்கமாக தமது எதிரிகள் என நம்புவோரின் மீது தாக்குதல் நடாத்துவது, அவர்களின் சொத்துக்களை அழிப்பது, பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பது என வீதியிலிறங்கியுள்ள பொதுமக்களின் எதிர்வினைகள் தொடர்கின்றன. இத்தகைய செயற்பாடுகளை போராடுபவர்களும் பொதுமக்களும் அவதானமாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என நாம் அன்புடன் வேண்டுகின்றோம்.

ஏனெனில் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கமும், அதனைத் தாங்கிப் பிடிக்கும் சித்தாந்தங்களும் அரசும் வன்முறையின் எந்த எல்லைக்கும் செல்லக் கூடியது என்பதற்கான அனுபவ சாட்சிகளாக தமிழ் மக்களாகிய நாம் உள்ளோம். ஆகவே, தெற்கின் போராட்டக்காரர்களும் பொதுமக்களும் மிக அவதானமாகவும், நிதானமாகவும், தந்திரோபாயமாகவும், அதேவேளை பாதுகாப்பாகவும் அரசுக்கு எதிரான தங்களது இந்த போராட்டத்தை இறுதி வெற்றிவரை கொண்டுசெல்ல வேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

சிங்கள மக்களிடையே வளர்த்தெடுக்கப்பட்ட சிங்கள பௌத்த பெருமித சிந்தனைகளை அவற்றால் இலாபமடைந்து வரும் சக்திகள் தமது நலன்களையும் இருப்பையும் பாதுகாப்பதற்கு எப்போதும் பயன்படுத்தி வந்துள்ளனர். இந்தப் போராட்டத்திலும் பிரிவினைவாத சிந்தனைகளாலும், தவறான ஏவல்களாலும் மட்டுமல்லாது போலித் தோழமையைத் தெரிவிப்பதனூடாகவும் போராட்டத்தைத் திசை திருப்பவும் முயற்சிக்கின்றனர்.

இந்த சக்திகள் தென்பகுதி மக்களின் தற்போதைய போராட்டங்கள் தங்களது நலன்களைப் பாதிக்கக் கூடிய உண்மையான மாற்றங்களுக்கு வழிசமைக்கக்கூடுமோ, புரட்சிகரமான முழுமையான மாற்றங்களுக்கு வழிவகுத்து விடுமோ என அஞ்சுகின்றார்கள். பதிலாக தாமும் மக்களுடன் நிற்பவர்கள் என்ற போர்வையில் சிறிய யாப்பு மாற்றங்கள் மற்றும் ஒரு சில முக மாற்றங்கள் மூலம் தற்போதைய ஜனாதிபதியைத் தற்காலிகமாகவேனும் தக்க வைத்துக் கொண்டு, சிங்கள பௌத்த பேரினவாத நலன்களுக்கான தற்போதைய யாப்பை இயன்றவரை பேணும் வகையிலான தீர்வுகளைப் பரிந்துரைத்து போராட்டத்தை தறுக்கணிக்க முயன்று வருகின்றனர்.

இத்தகைய சூழலில் தெற்கு மக்கள் தங்களது போராட்ட இலக்குகளை ராஜபக்ஷ குடும்பத்தினரை பதவியில் இருந்து நீக்குவது என்ற குறுகிய இலக்குகளுக்கு அப்பால் வளர்த்தெடுக்க வேண்டும். அந்த இலக்குகளை தெளிவாகவும் வரையறுத்து வெளிப்படுத்தவும் வேண்டும்.

இந்த நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் காரணமான சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனையில் இருந்து விடுவிக்கப்பட்ட மதச்சார்பற்ற, மக்களுக்கு பொறுப்புச் சொல்லும் வகையிலான ஒரு கூட்டாட்சி நாட்டையும், அதற்கேற்றவாறான மனோநிலை மாற்றத்தையும் உருவாக்குவதற்கு ஏற்றதாக ஒரு புரட்சிகரமான போராட்டமாக தங்களது போராட்டத்தை மாற்றி அமைப்பதனை நோக்கமாகக் கொண்டு முன்னேற வேண்டும்.

இதன் மூலமே இலங்கையின் ஏனைய தேசிய இனங்களும், சமூகங்களும் மனத் தடைகளோ, அச்சமோ இன்றி சிங்கள மக் களின் இன்றைய போராட்டத்தில் கைகோர்க்கும் நிலைமை உருவாகும். அத்தகைய புரட்சிகர நிலை ஒன்றும் அதன் மூலம் வருகின்ற மாற்றங்களும் மட்டுமே நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வுகளை நோக்கிய பாதையில் நாட்டையும் மக்களையும் முன்கொண்டு செல்லும் என தமிழ் சிவில் சமூக அமைப்புகளாகிய நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம், அகரம், ஐராணி அறக்கட்டளை, மட்டக்களப்பு நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையம், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அமைப்பு, அம்பாறை கிழக்கு பிராந்திய சபை, அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை, கிழக்கு சமூக அபிவிருத்திக்கான அறக்கட்டளை, யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம், காத்தான்குடி சிவில் சமூக நிறுவனங்களின் சம்மேளனம், சர்வ மதப் பேரவை, மட்டக்களப்பு யாழ்ப்பாணம் பொருளியலாளர் சங்கம், சமாதான ஆணைக்குழு, அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை, நீதிக்கும் சமாதானத்துக்குமான குருக்கள் மற்றும் துறவிகள், வடக்கு – கிழக்கு, புழுதி சமூக இயக்கம், திருகோணமலை தமிழ் சமூக செற்பாட்டாளர்கள் இணையம், தமிழ் சிவில் சமூக அமையம், தமிழர் மரபுரிமைப் பேரவை தளம், திருகோணமலைதென் கயிலை ஆதீனம், வெண்மயில் அமைப்பு, மட்டக்களப்பு ஆகிய அமைப்புக்கள் கூட்டாக இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

# ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எவரும் என்றும் விலைபோகமாட்டார்கள்

## ராஜித சேனாரத்ன திட்டவட்டம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷர்களின் தேவைக்காக செயற்பாடுவாரே தவிர மக்களின் தேவைக்காக ஒருபோதும் செயற்படமாட்டார். பிரதமரை இளைஞர்கள் ரணில் ராஜபக்ஷ என அழைப்பது தவறொன்றுமில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எவரும் விலைபோகமாட்டார்கள் என்பதை பிரதமரும், ஜனாதிபதியும் தெரிந்துகொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ராஜபக்ஷர்கள் தங்களின் அரசாங்கத்தை முன்கொண்டு செல்ல முடியாத காரணத்தால் தற்போது அதற்கு ஓர் இணைப்பு சக்தியை பொருத்தியுள்ளார்கள்.

நாட்டு மக்கள் ராஜபக்ஷர்களை முழுமையாகப் புறக்கணிக்கிறார்கள். கோட்டபய ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுவது மக்களுக்கு இழைக்கும் பாரிய துரோகமாகும். மக்களாணைக்கு முரணாகச் செயற்படும் தரப்பினருக்கு வரலாற்றில் இடம் கிடைக்காது. மக்களுக்கு முரணாக முன்னெடுக்கும் தீர்மானங்கள் நெடுகாலத்துக்கு நீடிக்காது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷ கடிதம் ஊடாக எமக்கு ஆலோசனை வழங்க வேண்டிய தேவை கிடையாது.

நாட்டு மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை முழுமையாகப் புறக்கணித்துள்ளார்கள். ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து செயற்பட முடியாது என்பதற்காகவே ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினோம். அதற்கு நாட்டு மக்கள் முழுமையான ஆதரவு வழங்கினார்கள்.

முறையற்ற வகையில் அரசாங்கத்தை ஸ்தாபித்து முன்னெடுத்து செல்ல முடியாது. ஜனாதிபதிக்கு அரசியல் தெரியாத காரணத்தால் அவருக்கு நிலையான அரசாங்கம் தொடர்பில் விளக்கம் போதாது.

ராஜபக்ஷர்களைப் பாதுகாப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களை இணைத்து முறையற்ற அரசாங்கத்தை அமைக்கவே ஜனாதிபதிக்குத் தெரியும்.

அரசாங்கத்துக்கு மக்களாணை ஒருபோதும் கிடையாது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க ராஜபக்ஷர்களுக்கு சார்பாகவே செயற்படுவார். ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஓர் உறுப்பினருக்கு 10 கோடி ரூபா வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியினர் இவ்வாறான முறையில் விலைபோவதில்லை என்பதை பிரதமரும், ஜனாதிபதியும் விளங்கிக்கொள்ள வேண்டும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2022இல் வெளியிடப்பெற்றது.